සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண **கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

මධ්‍ය වාර්ෂික පරීක්ෂණය 2017
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2017**
**Mid Term Test 2017**

07 ශ්‍රේණිය
தரம் 07
Grade 07

**ගණිතය**
கணிதம்
**Mathematics** } **I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two Hour

**பகுதி I**

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

பெயர் :


(01) சுருக்குக. 3 x 9 - 7

(02) வெற்றிடங்களை நிரப்புக.

2605mg = ...............g .................mg

(03) பெறுமானங்காண்க. (+8) + (-22)

(04) கீழுள்ள உருவைப் பயன்படுத்தி கோணவகையைப் பெயரிடுக.




a = ............................................ b = ................................

(05) $12l$ கொள்ளளவுடைய தாங்கியொன்றில் எண்ணெய் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. தாங்கியிலுள்ள குழாய் முழுமையாக மூடப்படாததால் எண்ணெய் கசிந்து மீதியாக $5l$ $750ml$ காணப்பட்டது. கசிந்த எண்ணெயின் அளவு யாது ?

(06) 3.5cm ஆரையுடைய வட்டத்தை வரைக.

(07) 1.25 ஐ பின்னமாக தருக.

(08) 5 மாதங்கள் 8 நாட்கள் எத்தனை நாட்களாகும் ?

(09) நான்கு சமச்சீர் அச்சுக்களை கொண்ட தளவுரு ஒன்றை வரைக.


(10) வெற்றிடத்தை நிரப்புக.

$3\frac{3}{5} - 1\frac{\square}{5} \; \square \; \frac{1}{5}$


(11) வெற்றிடத்திற்கு பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

$180^{o}$ இலும் குறைந்த .................. கூடிய கோணம் ......................... ஆகும்.

(12) தரப்பட்ட உருவின் பரப்பளவு $35cm^2$ ஆகும்.
அதன் நீளம் யாது?





(13) கீழே தரப்பட்ட உருவின் சுற்றளவுக்கான கோவையொன்றை $x,y$ யில் தருக.



(14) 3 ☐ 22 எனும் எண் 3 ஆல் மீதியின்றி வகுபடும் எனின் வெற்றிடத்திற்கு பொருத்தமான இரு இலக்கங்களை எழுதுக.

(15) சமாந்தர நேர்கோடுகள் இரண்டைப் பெயரிடுக.





(16) சுருக்குக.

1) 1.8 x 4 = .........................

2) 5.6 ÷ 4 = .........................

(17) 6m 18cm நீளமுள்ள 5 கம்பிகள் தொடர்ச்சியாக பொருத்தப்பட்டால் கம்பியின் மொத்த நீளம் யாது?

(18) உருவிலுள்ள இரண்டு சமனில்பக்க முக்கோணிகளைப் பெயரிடுக.




(19) 10*l* அளவான எண்ணெய் சமனான எட்டு பாத்திரங்களுக்கு ஊற்றப்பட்டன. ஒரு பாத்திரத்திலுள்ள எண்ணெயின் அளவை *l*,*ml* இல் தருக.

(20) $220^{o}$ அளவுள்ள பின்வளைகோணமொன்றை வரைக.

## பகுதி II

- 5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

(01) (a) A = {"RATHNAPURA" சொல்லிலுள்ள எழுத்துக்கள்}

(i) தொடை A யை மூலகங்களாக தருக. (பு. 02)

(ii) வென்னுருவில் தருக. (பு. 02)

(iii) {ஒற்றையெண்கள்} தொடையை { 1, 3, 5, 7 ..... } என எழுதுவதற்கான காரணத்தை தருக. (பு. 02)

(b) (i) 12, 18 எனும் எண்களின் பொ.ம.சி. யைக் காண்க. (பு. 03)

(ii) 12, 18 எனும் எண்களின் பொ.கா.பெ. ஐக் காண்க. (பு. 03)

(02) (i) $\frac{4}{7}$ , $\frac{3}{7}$ , $\frac{5}{7}$ , $\frac{2}{7}$ ஐ ஏறுவரிசையில் எழுதுக. (பு. 02)

(ii) $2\frac{2}{5}$ ஐ முறைமையில்லா பின்னமாகவும் தசம எண்ணாகவும் எழுதுக. (பு. 02)

(iii) சுருக்குக $5\frac{1}{3} + 2\frac{2}{3}$ (பு. 02)

(iv) சுருக்குக $7\frac{5}{12} - 4\frac{11}{12}$ (பு . 03)

(v) ஒரு தந்தை தனது காணியில் 1/3 ஐ மகனுக்கும், 1/4 ஐ மகளுக்கும் வழங்கினான். மீதியுள்ள காணியின் அளவு யாது?

(பு. 03)

(03) (a) (i) கழிக்க (பு. 02)

7kg 820g - 5kg 850g

(ii) 48kg நிறையுள்ள உலோக தகடு ஒன்று விரயமின்றி 750g நிறையுள்ள துண்டுகளாக வெட்டப்பட்டன. வெட்டப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை யாது? (பு. 03)


(iii) வெசாக்கூடு ஒன்றை ஆக்குவதற்கு 25cm நீளமுள்ள கம்பிகள் 24 தேவைப்பட்டன. அதற்காக தேவையான மொத்த கம்பியின் நீளம் யாது? (பு. 03)

(iv) தூண்களுக்கிடையில் 3m இடைவெளி உள்ளவாறு 150m நீளமான வேலி ஒன்றை அமைக்க 50 கம்பித் தூண்கள் போதாது என நகுலன் கூறினான். அவரது கூற்றுக்கு நீர் உடன்படுகின்றீரா ? காரணம் தருக. (பு. 04)

(04) (a) (i) m = 4, n = 2 எனின் 2m - 3n + 8 ன் பெறுமானம் யாது? (பு. 03)


(ii) புத்தகம் ஒன்றின் விலை ரூபா $x$ உம் பேனையொன்றின் விலை ரூபா y யும் ஆகும். 12 புத்தகங்களும், 8 பேனைகளும் விலைக்கு வாங்க தேவையான தொகையை அட்சரக்கணித கோவையாக தருக. (பு. 03)

(b) (i) $3x + 8 = 20$ சமன்பாட்டை தீர்ப்பதற்காக கீழேயுள்ள பாய்ச்சற்கோட்டுப் படத்தை பூரணப்படுத்துக.




(பு. 04)

(ii)




$x$ ன் பெறுமானத்தைக் காண்க. (பு. 02)

(05) (a) (i) 125 சுட்டிவடிவில் தருக. (பு. 02)

(ii) $5x^2 + 10y^2$ , $2y^3 + 5x^3$ எனும் கோவைகளில் பெரிய கோவையை தெரிந்து எழுதுக. (சாடை $x = 2$, $y = 5$ ஐப் பிரதியிடுக) (பு. 04)

(b) (i) கீழுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக.

| × | 3.75 |
|---|---|
| 10 | |
| 100 | |
| 1000 | |

(03 marks)

(ii) கூட்டினுள் உள்ள எண்களைப் பயன்படுத்தி வெற்றிடத்தை நிரப்புக.

$\frac{1}{4}$ = ................................

3.23 x 10 = .. .............................


3.23 x 100 = ................................ (பு. 03)

| 32.3 | 0.25 | 0.323 | 2.5 |
|---|---|---|---|


(06) (a) (i) குவிவு பல்கோணிகள் இரண்டை வரைக. (பு. 02)

(ii) ஒழுங்கான அறுகோணியொன்றை அமைக்க. (பு. 03)


(iii) கீழேயுள்ள முக்கோணிகள் எவ்வகையானவை என எழுதுக. (பு. 03)




..........................................




..........................................




..........................................

(b) (i) வட்டமொன்றின் விட்டம் 8cm ஆகும். அதன் ஆரை யாது? (பு. 02)

(ii) 3cm ஆரையுள்ள வட்டமொன்றை வரைந்து அதன் மையத்தை பெயரிடுக. (பு. 02)

(07) (i) 9m நீளமும் 4m அகலமும் உள்ள செவ்வக அடர்ஒன்றின் பரப்பளவுக்கு சமனான சதுரமொன்றின் பக்க நீளம் யாது? (பு. 05)

(ii) நீளம்,அகலம்,உயரம் முறையே 80cm, 20cm, 0.5m ஆகும் தாங்கியொன்றில் நிரப்பக் கூடிய நீரின் உச்சக் கனவளவு யாது? (பு. 03)

(iii) 125*ml* அளவுப்படி நிரப்பப்பட்ட 16 சிறிய போத்தல்களில் உள்ள நிறச்சாயம் ஒரு தனிபோத்தலுக்கு ஊற்றப்பட்டது. அப்போத்தல் முழுமையாக நிரம்பியது எனின் அதன் கனவளவை *l* இல் காண்க.

(பு. 04)